விலை: 30.00
website : www.valampurii...
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

கலயாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

சங்கு 23
ஒலி 071 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 16 திங்கட்கிழமை (28.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## இலங்கையை குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்துங்கள்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஐ.நாவுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் தாயகத்தில் இழைக்கப்பட்ட மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் மனிதாபிமானச் சட்டமீறல்களுக்கான பொறுப்புக்கூறலை செய்வதற்காக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப் படுத்துமாறு ஐக்கிய நாடுகள் மனித உரி 15

## தமிழ் மக்களைச் சாகடிக்கும் பயங்கரவாத சட்டம் எதற்கு?

### சிறீதரன் எம்.பி. கேள்வி



(கிளிநொச்சி)

தமிழ் மக்களைச் சாகடிக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இன்னும் நீக்கப்படாமல் இருப்பது நாட்டுக்கு மிகப்பெரிய அவமானமாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் 15

## திடீர் காய்ச்சலால் பெண் குழந்தை உயிரிழப்பு

### கொடிகாமத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

காய்ச்சல் காரணமாக பிறந்து 71 நாட்களேயான பெண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. 02

## ரஷ்யாவுடன் அமைதி பேச்சுக்கு தயார்!

### உக்ரைன் ஜனாதிபதி அறிவிப்பு



*(கீவ்)*

**ரஷ்யாவுடன் எந்தவொரு முன்நிபந்தனைகளும் அற்ற பேச்சுக்கு தயாராக உள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி நேற்று தெரிவித்துள்ளார்.**

உக்ரைன் - பெலாரஸ் எல்லையில் எந்த முன்நிபந்தனையும் இன்றி ரஷ்ய தரப்புடன் பேச முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோவை நேற்று 15

## ஐரோப்பிய நாடுகள் மீது அணுவாயுதத் தாக்குதல்!

### ரஷ்ய ஜனாதிபதி கடும் எச்சரிக்கை



(ரஷ்யா)

உலக நாடுகளின் கடும் அழுத்தங்களையும் மீறி உக்ரைன் - ரஷ்யாவுக்கு இடையிலான யுத்தம் நான்காவது நாளாகவும் தீவிரமடைந்துள்ளது.

உக் 15

### தயார்நிலையில் இருக்குமாறு

## அணு ஆயுதப் படைக்கு ரஷ்ய ஜனாதிபதி உத்தரவு

(மொஸ்கோ)

ரஷ்ய இராணுவத்தின் அணு ஆயுதப் படைப் பிரிவை விசேட எச்சரிக்கையுடனான தயார் நிலையில் இருக்குமாறு அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ளார். 02




(கொழும்பு)

இலங்கையில் இன்றைய தினம் 5 மணித்தியாலத்துக்கும் அதிகநேரம் மின் துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் 15

## கொரோனா 24 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 24 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இது 15

# ஐ.நா தொடர் இன்று ஆரம்பம்

## ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரால் இலங்கை தொடர்பான அறிக்கை இன்று சமர்ப்பிப்பு



**_(ஜெனிவா)_ ஐ.நா கூட்டத்தொடரின் 49 ஆவது அமர்வு இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது. இக் கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய 11 முக்கிய பரிந்துரைகள் தொடர்பான அறிக்கை ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட்டினால் இன்று சமர்ப்பிக்கப் படவுள்ளது.** *(15ஆம் பக்கம் பார்க்க)*

## யாழ். பல்கலை விரிவுரையாளர்கள் நால்வர் பேராசிரியர்களாக பதவி உயர்வு


பேரா. சி.சண்முகதாஸ் பேரா. சி.சிறீவசன் பேரா. பி. அபிமன் பேரா. த.திருவரன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் நால்வர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

வணிக முகாமைத் 15

## பொலிஸ் உத்தியோகத்தர் பூநகரி விபத்தில் பலி!




(பூநகரி)

பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார்.

மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மிகப்பெரிய விமானம் ரஷ்யாவால் தாக்கியழிப்பு



(கீவ்)

உக்ரைனில் தயாரிக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய சரக்கு விமானமான அன்ரனோவ்- 225 மிரியா (Antonov-225 Mriya) தலைநகர் கீவ்விற்கு அருகிலுள்ள ஒரு விமான நிலையத்தில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் எரிந்தது.

உக்ரைன் அரச ஆயுத உற்பத்தியாளரான Ukroboronprom இதனை தெரிவித்துள்ளது.

இது கீவ் அருகே ஹோஸ்டோமலில் உள்ள அன்டோனோவ் விமான நிலையத்தில் நடந்தது என்று தனது பேஸ்புக்பக்கத்தில் தெரிவித்துள்ளது.

விமானத்தை மறுசீரமைக்க 3 பில்லியன் டொல்ருக்கும் அதிகமாக செலவாகும் என்றும் நீண்ட காலம் எடுக்கும் என்றும் அது கூறியது. (ஞா)

## அணு ஆயுதப்...

இது ரஷ்யாவின் மூலோபாய ஏவுகணைப் படைகளுக்கான மிக உயர்ந்த எச்சரிக்கையாகும்.

பாதுகாப்பு அமைச்சர் செர்கேய் ஷோகு உட்பட சிரேஷ்ட ரஷ்ய இராணுவ அமைச்சர்களிடம் நேற்று பேசிய புடின், மேற்கத்தேய நாடுகள் ரஷ்யாவை நோக்கி மோசமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. மேலும் சட்டவிரோதமான தடைகளையும் விதித்துள்ளன என்று தெரிவித்தார்.

மேலும் இதற்கான எதிர்வினை குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ரஷ்யா - உக்ரைன் உச்சக்கட்ட போர் பதற்றங்கள் மத்தியில் இது ஒரு அணுசக்தி யுத்தமாக உருவாகலாம் என்ற அச்சுறுத்தலை புடினின் இந்த எச்சரிக்கை எழுப்பியுள்ளது. (ஞா)

## பெண் குழந்தை...

இச் சம்பவத்தில் கொடிகாமம் தவசிக்குளத்தைச் சேர்ந்த அஸ்மிகா என்ற பிறந்து 71 நாட்களேயான பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் குழந்தைக்கு திடீர் காய்ச்சல் மற்றும் வலிப்பு ஏற்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அன்றைய தினம் மாலையே குழந்தை உயிரிழந்துள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ஞா)


நீர்க்கசிவினை நிரந்தரமாக நிறுத்துவதற்கு

**Water Proofing**

உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள் போன்ற இடங்களில் ஏற்படும் நீர்க்கசிவு, ஊறல் போன்ற பிரச்சினைகளை உத்தரவாத சான்றிதமுடன் நிரந்தரமாக நிறுத்தி தருகின்றோம்.

Skyline Holders (PVT) ltd

**Skyline Holders (Pvt) Ltd.**
No.89, Old Park Road, Jaffna.
077 722 0095/ 021 221 4994/ 076 663 6481

(10403)

முல்லைத்தீவு/ கிளிநொச்சி → 077 741 4960 | மன்னார்/ வவுனியா → 077 279 0743


முதலாம் ஆண்டு

## நினைவு நாள்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 22 | 28 |
| 04 | 02 |
| 1943 | 2021 |



"என் கடவுளாகிய ஆண்டவரே
உம்மிடம் அடைக்கலம் புகுந்துள்ளேன்"

### அமரர் இராயப்பு அமிர்தநாயகம்
(Artist)

மண்ணக வாழ்வை விட்டுப் பிரிந்து சென்று
ஓராண்டு சென்றாலும் எம் நெஞ்சத்தை விட்டு
நீங்காத எம் அன்புத் தந்தையே!
உம்மை இனி எப்போது காண்போம்
ஆயிரம் உறவு இருந்தும் என்ன
அப்பா உங்கள் அன்பிற்கு ஈடாகுமா...?

உங்களின் ஆன்மா விண்ணில் இன்புற்றிருக்க
தினமும் இறைவனிடம் வேண்டும்
குடும்பத்தினர்


# NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD, JAFFNA.

NEW SCIENCE HALL

## 2022 A/L

(2021 A/L பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது)
நேரடி வகுப்பு - நிகழ்நிலை வகுப்பு

## DAY CLASSES

திங்கள் தொடக்கம் வெள்ளி வரை

**PHYSICS**
திரு.G.பிரபா திரு.S.சோதிலிங்கம்
11.30 - 1.30 Noon

**BIOLOGY**
திரு.V.S.குணசீலன் திரு.T.கெங்காதரன்
8.00 - 9.30 A.M

**CHEMISTRY**
திரு.S.T.உமாசங்கர் திரு.V.செல்வரஞ்சன்
9.30 - 11.30 A.M

**COM. MATHS**
திரு.P.செந்தில்நாதன்
7.00 A.M

ஆரம்பம்:- 07.03.2022 திங்கட்கிழமை

தொடர்பு:- 077 791 7611, 076 566 3006, 076 569 3006

(C-3871)

https://Facebook.com/New Science Hall Jaffna


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களுக்கு அதிகாரத்தை வழங்க இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

## பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் வலியுறுத்து

(சென்னை)

**ஈழத்தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்குமாறு இலங்கையிடம் இந்தியா கண்டிப்புடன் கூற வேண்டும் என பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் வலியுறுத்தினார். மேலும், ஈழத்தமிழர்களின் நலன்களைக் காக்கும் கடமை இந்தியாவுக்கு உண்டு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.**



இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

ஈழத்தமிழர் இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டி வரும் ஐ.நா. மனித உரிமை ஆணையம், இது தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த ஆண்டு மார்ச் 23 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குப் பிறகு ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து புதிய அறிக்கை ஒன்றை அண்மையில் வெளியிட்டிருந்தது.

போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது தாங்களாகவே நடவடிக்கை எடுக்கப் போவதாக 2 ஆண்டுகளுக்கு முன் மனித உரிமைப் பேரவையில் வாக்குறுதி அளித்த இலங்கை, அதை நிறைவேற்றவில்லை. மாறாக, தமிழர்களை அச்சுறுத்தி அடிமைப்படுத்தும் பணிகளைத் தான் செய்து வருகிறது. தமிழர்களின் நிலங்களை பறித்து அவர்களின் வாழ்வாதாரத்தை அழிப்பது, அவர்களை அவர்களின் சொந்த பூமியிலிருந்து வெளியேற மறைமுகமாக அழுத்தமும், மிரட்டலும் விடுப்பது போன்ற செயல்களில் இலங்கை அரசு ஈடுபட்டு வருகிறது. பன்னாட்டு விதிகளின் படி இவையும் இனப்படுகொலைக்கு ஒப்பான செயல்கள் தான் என்பதில் ஐயமில்லை.

மன்னிக்க முடியாத அளவுக்கு போர்க்குற்றங்களை இழைத்த ஒரு நாடு, அது குறித்த குற்ற உணர்வே இல் லாமல் தொடர்ந்து இனவெறித் தாக்குதல்களை நடத்துவதை அனுமதிக்க முடியாது. அதிலும் குறிப்பாக உணவுக்கும், எரிபொருளுக்கும் வழி இல்லாமல் தவிக்கும் இலங்கைக்கு உதவிகளை வாரி வாரி வழங்கும் இந்திய அரசு, இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் குற்றச்சாட்டை வேடிக்கை பார்க்கக் கூடாது.

இலங்கைக்கு எந்த எச்சரிக்கையும் விடுக்காமல், அதன் இனவெறித் தாக்குதல்களைத் தடுக்காமல் உதவிகளை மட்டும் வழங்குவது இலங்கையின் செயல்களுக்கு இந்தியா துணை போவதாகவே பார்க்கப்படும்.

பொதுவான கடமைகளைக் கடந்து ஈழத்தமிழர்களின் தந்தை நாடு என்ற வகையில், ஈழத்தமிழர்களின் நலன்களைக் காக்கும் சிறப்புக் கடமையும் இந்தியாவுக்கு உண்டு. அதனால், ஈழத்தமிழர்களுக்கு எதிரான செயல்களில் ஈடுபடக்கூடாது. ஈழத்தமிழர்களுக்கு அரசியல் அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று இலங்கையிடம் இந்தியா கண்டிப்புடன் கூற வேண்டும். அதைத்தான் உலகத் தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இலங்கை போர்க்குற்றங்கள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையரின் அறிக்கை எதிர்வரும் மார்ச் 3 ஆம் திகதி ஐ.நா.மனித உரிமை பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு, அதன் மீது விவாதம் நடத்தப்படவுள்ளது.

இந்த விவாதத்தில் இந்திய அரசின் பிரதிநிதி கலந்து கொண்டு ஈழத் தமிழர்களுக்கு நீதிகிடைக்க மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை வலியுறுத்த வேண்டும். ஈழத் தமிழர் இனப்படுகொலைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவதையும், இலங்கை இனச்சிக்கலுக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணவும் தெற்காசிய சக்தி என்ற முறையில் இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி)

## தேவையான மருந்துகள் கையிருப்பில்

(கொழும்பு)

எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு போதுமான மருந்து தொகை அரச மருத்துவமனைகளில் இருக்கின்றது என மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும் தனியார் துறையினருக்கு மருந்துகளை இறக்குமதி செய்வதில் காணப்படும் டொலர் பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடவுள்ளோம்.

அதனால் நாட்டில் மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை என்று இராஜாங்க அமைச்சின் செயலாளர் மருத்துவர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி)

## இலங்கையில் தங்கியுள்ள உக்ரேய்னியர்களின் விசாக்காலத்தை நீடிக்க தீர்மானம்

(கொழும்பு)

உக்ரேய்னில் நிலவும் மோதல் காரணமாக இலங்கையில் தங்கியுள்ள உக்ரேய்னியர்களின் விசாக் காலத்தை நீடிப்பதற்கு சுற்றுலாத்துறை அமைச்சு தீர்மானித்தள்ளது.

உக்ரேய்னிய சுற்றுலாப் பயணிகள் சுமார் 4,000 பேர் தற்போது இலங்கையில் தங்கியுள்ளனர்.

உக்ரேய்னில் நிலவும் மோதல் காரணமாக இலங்கையில் தங்க விரும்பும் சுற்றுலாப் பயணிகளின் விசாவை நீடிக்குமாறு சுற்றுலா அமைச்சு சம்பந்தப்பட்ட பயண முகவர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

மேலும் சுற்றுலாப் பயணிகளின் விசா காலாவதியான பின்னர் உக்ரேய்னுக்கு நேரடி விமான சேவைகள் இருக்காது என்பதால் அவர்கள் வேறு நாடுகளுக்குத் திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும் முகவர் நிலையங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# தமிழினப் படுகொலைக்கு சுயாதீன விசாரணைகோரி ஜேர்மன் தலைநகரில் மனித சங்கிலி போராட்டம்



(பேர்லின்)

இலங்கையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலைகளுக்கு அனைத்துலக சுயாதீன விசாரணை கோரி, ஜேர்மனியின் தலைநகர் பெர்லின் உட்பட்ட 53 நகரங்களில் மனிதச் சங்கிலி போராட்டம் நடத்த ப்பட்டது.

போராட்டத்தில், தமிழர் தாயகத்துக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும் என்ற கோரிக்கை உட்பட முக்கிய விடயங்கள் வலியுறுத்தப்பட்டிருந்தன.

இன்று ஐ.நா. மனித உரிமை பேரவை அமர்வு ஆரம்பிக்கவுள்ள பின்னணியில், ஜேர் மன் ஈழத்தமிழர் மக்கள் அவை ஏற்பாடு செய்துள்ள இந்த போராட்டங்கள் நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டு மணிமுதல் மாலை நான்கு மணிவரை இடம் பெற்றிருந்தன.

இதேபோன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ஐரோப்பாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மிதிவண்டிப்பயணம் நேற்று முன்தினம் பதினோராவது நாளாக பிரான்ஸ் ஊடாக கடந்து வருவது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மன்னாரை சேர்ந்த உதைபந்தாட்ட வீரர்

# மாலைதீவில் உயிரிழப்பு




இலங்கை உதைபந்தாட்ட அணி வீரரும் மாலைதீவின் கழக அணி வீரருமான டக்ஸன் பியூஸ்லஸ் மாலைதீவில் உயிரிழந்துள்ளார்.

இவர் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்றார். கால்பந்து உலக கிண்ணத்திற்கான தகுதிகான் போட்டியில் இலங்கை தேசிய அணியில் பங்கேற்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்தார்.

அதேநேரம் இலங்கை தேசிய அணியில் சிறந்த பின் கள வீரராக விளங்கினார்.

கடந்த ஆண்டு இடம்பெற்ற SAFF கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் ,இந்திய அணியுடனான போட்டியில் சிறந்த வீரருக்கான விருதினை பெற்றுக் கொண்டார்.

அந்த போட்டி சமநிலையில் முடிவடைந்திருந்தது.

இவ்வருடத்திற்கான மிக பிரபலமான வீரருக்காக இடம்பெற்ற கருத்து கணிப்பில் ரன்னரப்பாக பியூஸ்லஸ் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடதக்கது.

(4-6-285)

# இலங்கைக்கு எதிரான தொடரை வென்றது இந்திய அணி



இலங்கை அணிக்கு எதிராக தரம்சாலாவில் நடந்த 2ஆவது ரி20 போட்டியில் 17 பந்துகள் மீதமிருக்கையில் 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்ற இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரைக் கைப்பற்றியது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் விளையாடி வருகிறது.

இதில் லக்னோவில் நடந்த முதல் போட்டியில் இந்திய அணி 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் தரம்சாலா மைதானத்தில் 2ஆவது ரி20 போட்டி நடைபெற்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 183 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் பதும் நிசாங்க் 75. கேப்டன் தசுன் சனகா 47 ஓட்டங்கள் அதிகப்பட்சமாக எடுத்தனர்.

தொடர்ந்து 184 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியில் ஸ்ரேயாஸ் ஐயர் 74. சஞ்சு சாம்சன் 39. ஜடேஜா 45 ஓட்டங்கள் விளாச 17.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து இந்தியா 7 விக்கெட் டுக்களால் அபார வெற்றி பெற்றது.

இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரை இந்திய அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

(4-6)



# மரண அறிவித்தல்



# சைமன் குணநாயகம்

**(ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிகாரி)**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25.06.1950 | 27.02.2022 |

நவாலியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சைமன் குணநாயகம் அவர்கள் நேற்று (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி சைமன் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து (செல்லர்) - மாசில்லாமணி தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் (இராசாத்தி) பாசமிகு கணவரும் கமிலஸ் (உதவி முகாமையாளர் - சம்பத் வங்கி), கோமஸ் (இத்தாலி), றொஷானி (ஆய்வுகூட முகாமையாளர் - நவலோகா, நீர்கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் வலன்ரீனா, ஸ்ரீமாலி, காலஞ்சென்ற நிஷாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அற்புதமலர், செல்வநாயகம், இராசாத்தி, தர்மினி, சாந்தி, ரஞ்சினி, சுட்டி மற்றும் காலஞ்சென்றவர்களான தாசன், ஆஸ்லி, இன்பமலர் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (28.02.2022) திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் (பெரிய கோவில்) ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.37, சோமசுந்தரம் அவனியூ,
யாழ்ப்பாணம். *(புகையிரத கடவைக்கு அருகில்)*

(10404)

தகவல்: குடும்பத்தினர்
077 758 9730 (கமிலஸ்), 076 649 6638 (றூபா), 076 675 7294 (றொபின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 600 வகையான பொருட்களுக்கு வரி அதிகரிப்பு- அஜித்நிவாட் கப்ரால்

(கொழும்பு)

**இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்கள் உட்பட அத்தியாவசியமற்ற 600 ஆடம்பர பொருட்களுக்கான வரியை அதிகரிக்குமாறு அரசாங்கத்திடம் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கோரிக்கை விடுத்துள்ளார்.**



நாட்டின் நிதி ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் மத்திய வங்கியின் ஆளுநரினால் இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

ஆடம்பரப் பொருட்களின் முழுமையான பட்டியலை முன்வைத்து அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளதாக தென்னிலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கம் இந்த பொருட்களின் இறக்குமதியை ஊக்கப்படுத்தாமல் இருப்பதற்காக விதிக்கப்பட்டுள்ள வரிகளை தற்போது. ஓரளவிற்கு அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய வங்கி ஆளுநரின் பட்டியலில் உள்ளடங்காத அத்தியாவசியமற்ற வேறு ஏதேனும் ஆடம்பரப் பொருட்கள் உள்ளதா? என்பது தொடர்பாகவும் இலங்கை மத்திய வங்கி தற்போது ஆய்வு செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(நி)

# பூஸ்டர் பெற்றுக் கொண்டவர்கள் வடக்கு மாகாணத்தில் குறைவு

## சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் கொவிட் பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களின் தொகை மிகவும் குறைவாகக் காணப்படுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன சுட்டிக் காட்டியுள்ளார்.

கொவிட்டை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி வழங்கல் இடம்பெற்று வரும் நிலையில் பல மாகாணங்களில் 60 வீதத்துக்கு அதிகமானவர்கள் குறித்த தடுப்பூசியை பெற்றுள்ளனர்.

வட மாகாணத்தை பொறுத்தவரையில் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாக காணப்படுகின்றது. 24.3 வீதமானோரே இது வரை வடக்கில் பூஸ்டர் தடுப்பூசி பெற்றுள்ளனர்.

இந்நிலையில் எதிர்வரும் மார்ச் மாதத்தில் இதனை 40 வீதமாக அதிகரிப்பதற்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவுறுத்தியுள்ளார்.(நி)


## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடம் உள்ளது

- **அலுவலகச் செய்தியாளர்கள்**
  (இருபாலாரும்)
  (உள்ளகம், வெளியகம்)
  தகைமை : உயர்தரம் கற்றிருத்தல்.
- **பக்க வடிவமைப்பாளர்கள்**
  (தமிழ் ரைப்பிங், விளம்பர வடிவமைப்பு உட்பட)
  தகைமை : க.பொ.த (சாதாரண தரம்)
- **பத்திரிகை விநியோகஸ்தர்கள்**
  (சாரதி அனுமதிப் பத்திரம், சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருத்தல்)

யாழ். நகரில் இருந்து 6 Km க்கு உட்பட்ட நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருத்தல்

தொடர்பு
**076 097 3121**


## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பர் க.கனகராஜா (கனெக்ஸ்)
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி. கனகரத்தினம் ஆனந்தமலர்



அவர்கள் காலமான செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் - 1953.12.09 மறைவு - 2022.02.25

**வலம்புரி நண்பர்கள்.**

# இராசிபலன்

28.02.2022
மாசி 16, திங்கட்கிழமை
திரயோதசி பின்னிரவு 2.51 மணிவரை
திருவோணம் பின்னிரவு 4.59 மணிவரை

சுபநேரம் - 12.28-1.58 மணிவரை
இராகுகாலம் -7.58-9.28 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம் திருவாதிரை

வளவன்


மேஷம்

செய் தொழில் மேன்மையுண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


கடகம்

நட்பால் நல்ல காரியம் ஒன்று நடைபெறும் வாய்ப்புண்டு, வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


துலாம்

சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.


மகரம்

உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல்கள் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம்.


ரிஷபம்

குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.


சிம்மம்

மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும், சிக்கனத்தை கடைபிடிக்கும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு.


விருச்சிகம்

சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், வளர்ச்சி கூடும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.


கும்பம்

சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளை செய்யலாம், பயணங்களால் பிரபல்யமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.


மிதுனம்

கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.


கன்னி

மனநிறைவு கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.


தனுசு

குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், செய் தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும்.


மீனம்

விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும் விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

நல்ல அறிவுரை விலை மதிப்பற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசின் நிதி மூலம் வீட்டுத்திட்டங்கள் பூரணப்படுத்தப்பட வேண்டும்

## சாவ.பிரதேசசபை தவிசாளர்

(சாவகச்சேரி)

நடப்பு ஆண்டில் அரசாங்கத்தால் உள்ளூராட்சி மன்ற வட்டார உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட தலா 4 மில்லியன் ரூபாய் நிதியை கடந்த அரசாங்கத்தில் சஜித் பிரேமதாஸவினால் வழங்கப்பட்டு பூரணப்படுத்தாத நிலையில் உள்ள வீட்டுத்திட்டங்களை பூரணப்படுத்த வழங்குமாறு கோரிக்கை விடப்படவிருப்பதாக சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது நாடளாவிய ரீதியாக அரசாங்கத்தால் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற வட்டாரப் பிரதிநிதிகளுக்கும் வட்டார அபிவிருத்திக்கென நான்கு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வட்டாரங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியை கடந்த காலத்தில் சஜித் பிரேமதாஸவினால் வழங்கப்பட்டு பூரணப்படுத்தப் படாத நிலையில் உள்ள யாழ். மாவட்ட வீட்டுத்திட்டங்களுக்கு பயன்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்தைக் கோர ஆலோசிக்கப்படுகிறது.

இது தொடர்பான கோரிக்கை ஒன்று ஒரு சில மேல் மட்டங்களால் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் முன்வைக்கப்படும்.

குறித்த கோரிக்கை நடைமுறைப்படுத்தப்படாமல் தன்னிச்சையாக ஒரு சிலரால் குறித்த வட்டார நிதிகள் பயன்படுத்தப்படுமானால் யாழ் .மாவட்ட செயலகம் முன்பாக போராட்டம் ஒன்றினை முன்னெடுப்பது தொடர்பாகவும் குறித்த மேல் மட்டம் தீர்மானித்துள்ளதுஎன மேலும் அவர் தெரிவித்தார். (4-6-30)

# தென்மராட்சியில் இருவேறு பகுதிகளில் வாள் வெட்டு

## இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இரு வேறு வாள்வெட்டுச் சம்பவங்களில் இருவர்படுகாயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு வேலை முடித்து வீடு திரும்பிய இளைஞனை மறைந்திருந்த குழுவொன்று வாளால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளது.

இதில் நாவற்குழி தெற்கு பகுதியைச் சேர்ந்த 24 வயதான இளைஞன் கை மற்றும் முதுகுப் பகுதிகளில் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அதேசமயம் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெற்பேலி மத்திப் பகுதியில் அன்றைய தினம் இரவு இடம்பெற்ற வெட்டுச் சம்பவத்தில் 36 வயதான நபர் தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி மற்றும் கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# கைவிடப்பட்ட நிலையில் மோ.சைக்கிள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு அருகில் கைவிடப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்றினை பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த ஆலயத்திற்கு அருகில் கடந்த வியாழக்கிழமை முதல் மோட்டார் சைக்கிள் ஒன்று அநாதரவான நிலையில் காணப்படுவதாகவும், சந்தேகத்துக்கு உரிய முறையில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளதாகவும், சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அவ்விடத்திற்குச் சென்ற பொலிஸார் மோட்டார் சைக்கிளை மீட்டு, பொலிஸ் நிலையம் கொண்டு சென்றதுடன், மோட்டார் சைக்கிளின் உரிமையாளரை கண்டறிய விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-18-33)

## கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு

# 108 சிவலிங்கங்கள் சிவபூமி அறக்கட்டளையினரால் அனுப்பி வைப்பு



(குப்பிழான்)

சிவபூமி அறக்கட்டளையினரின் சமயப் பணிகளில் ஒன்றாக கிழக்கிலங்கையை பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை ஆலய வீதியில் நன்கொடையாக வழங்கப்பட்ட இரண்டு ஏக்கர் நிலத்தில் திருமந்திர அரண்மனையை நிர்மாணிப்பதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

அங்கு 3000 திருமந்திரப் பாடல்களையும் கருங்கல்லில் காட்சிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் முதற்கட்டமாக கருங்கற்களாலான 108 சிவலிங்கங்கள் சிவபூமி அறக்கட்டளையினரால் உருவாக்கப்பட்டு கோண்டாவிலில் அமைந்துள்ள சிவபூமி மனவிருத்திப் பாடசாலையிலிருந்து நேற்றையதினம் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி ஆலய அறங்காவலர் சபையினர் 108 சிவலிங்கங்களையும் பொறுப்பெடுத்து நாளை செவ்வாய்க்கிழமை மகாசிவராத்திரி நன்னாளில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் 108 சிவலிங்கங்களையும் கிழக்கிலங்கை அடியவர்கள் தரிசிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர். கலாநிதி. ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

குறித்த திருமந்திர அரண்மனையின் நிர்மாணப்பணிகள் நிறைவுற்றதும் சிவலிங்கங்கள் அரண்மனையில் பிரதிஷ்டை செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (4-6-18)

# திருட்டுடில் ஈடுபட்டவர்கள் பொதுமக்களால் மடக்கி பிடிப்பு

(கரணவாய்)

வடமராட்சி கரவெட்டி சம்பந்தர் கடையடிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தை உடைத்து திருட்டில் ஈடுபட்ட இருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி வர்த்தக நிலையத்தில் ஒரு வருட காலப்பகுதிக்குள் ஏற்கனவே இரண்டு முறை திருட்டு இடம்பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து வர்த்தகர் தனது வர்த்தக நிலையத்திற்கு கண்காணிப்பு கேமராவை பொருத்தி இருந்தார்.

இதனை அறியாத திருடர்கள் மீண்டும் அவ் வர்த்தக நிலையத்தில் திருடுவதற்காக நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை உள் நுழைந்தமை அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா மூலம் கண்டறியப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதி மக்களால் பிடிக்கப்பட்ட இருவரும் நெல்லியடிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (4-6-60)

# கத்திக்குத்து ஒருவர் கைது

(கரணவாய்)

பருத்தித்துறை சுப்பர் மடம் பகுதியில் நபரொருவரை கத்தியால் குத்திய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் பருத்தித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு மேற்படி பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பழைய பகைமை காரணமாக ஏற்பட்ட முரண்பாட்டினாலே இக் கத்திக்குத்து இடம் பெற்றதாக கூறப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளைமேற்கொண்ட பருத்தித்துறை பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சந்தேக நபரை கைது செய்தனர். (4-6-60)

## மகா சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப்பாடசாலை நடத்தும் மகா சிவராத்திரிவிழா நாளை 1 ஆம் திகதி சிவராத்திரி தினத் தன்று இரவு 8 மணிக்கு அறநெறிப் பாடசாலை அதிபர் ந.து.ஜெயதீஸ்வரன் தலைமையில் ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றிருக்கும் டாக்டர் பா.குமரேந்திரனின் கௌரவிப்பு நிகழ்வும் ஊரெழு ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலய பரிபாலன சபைத்தலைவர் அமரர் இ.திருச்செல்வத்தின் உருவப் படத் திறப்பும் நினைவு அஞ்சலி உரையும் இடம்பெறவுள்ளது. அத்துடன் பல கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என அறநெறிப் பாடசாலை அதிபர் ந.து.ஜெயதீஸ்வரன் அறிவித்துள்ளார். (4)



நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி காஞ்சனா விமலவீர தலைமையில் நெல்லியடி பொலிஸாரால் நேற்று யாழ்.பருத்தித்துறை 750 வீதியின் இரு மருங்கிலும் 1,500 நிழல் தரும் மரங்கள் நாட்டப்பட்டன. இந்நிகழ்வில் காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் K.m.a.k. பண்டார கலந்து கொண்டு நாட்டி வைத்தார். (படம்:-மகாலிங்கம்)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரநாயகி உடனாய உருத்திரபுரீஸ்வரர் சிவாலயத்தின் பிரதம குருக்கள் சாமஸ்ரீதேசமானிய சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்காந்தராஜக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை ஐ.நா.பெற்றுக்கொடுக்க வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

(கொழும்பு)

அதிகாரப்பகிர்வுடன் கூடிய புதிய அரசியலமைப்புக்கான தேவையை வலியுறுத்தியுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட் அம்மையாரின் அறிக்கையில் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் உள்ளிட்ட முக்கிய பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அதைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வரவேற்கிறது என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.


ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட்டின் இலங்கை பற்றிய, 'இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தினை ஊக்குவித்தல்' எனும் தலைப்பிலான அறிக்கையின் முதற்பிரதி வெளியாகியது.

அம்மையாரின் அறிக்கையின் உள்ளடக்கத்தில் எம்மால் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. விசேடமாக, இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வினைக் காண்பதற்காக புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற விடயத்தினை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

அந்த வகையில் உயர்ஸ்தானிகரும் தனது அறிக்கையில், அதிகாரப்பகிர்வுடன் கூடிய புதிய அரசியலமைப்பு தொடர்பில் அவதானம் அவசியம் என்று குறிப்பிட்டிருக்கின்றமை வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு தொடர்ச்சியான அழுத்தங்களை இலங்கை அரசாங்கத்தின் மீது ஐ.நா. பிரயோகிக்க வேண்டியது அவசியமென சுமந்திரன் மேலும் தெரிவித்தார். (நி)

# தேயிலை தொழிற்சாலையில் தீ விபத்து



(கண்டி)

கண்டி - பன்விலை ராக்ஷாவ தோட்டத்தில் அமைந்துள்ள தேயிலை தொழிற்சாலையில் தீ விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட தீ விபத்து காரணமாக தொழிற்சாலைக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

தொழிற்சாலையில் ஊழியர்கள் வேலை செய்து கொண்டிருக்கும் போது தொழிற்சாலையில் ஒரு பகுதியில் இத் தீ ஏற்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரி வித்தனர்.

தேயிலை தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ காரணமாக தொழிற்சாலையின், கட்டிடத்திற்கும், இயந்திரங்களுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. இதன்போது தயாரிக்கப்பட்டிருந்த பெருந்தொகை தேயிலையும் சேதமாகி உள்ளது.

இத் தீ ஏற்படுவதற்கு காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை என்றும் மேலதிக விசாரணைகளை மேற்கொள் வதாகவும் பன்விலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# நாட்டில் புதிய பிறழ்வு உருவாகும் அபாயம்

(கொழும்பு)

புதிய கொவிட் பிறழ்வு நாட்டில் உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

"பொதுமக்கள் ஒன்று கூடும் வகையில் நடத்தப்படும் இசை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் காரணமாகவே அபாய நிலைமை அதிகரித் துள்ளது.

இதனால், தடுப்பூசிகளுக்கு கட்டுப்படாத புதிய கொவிட் பிறழ்வொன்று உருவாவதற்கான சாத்தியம் எழுந்துள்ளது.

அடுத்தடுத்த மாதங்களி லும் இசை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகிறது. இவ்வாறான நிகழ்ச்சிகளுக்கு பொதுமக்கள் ஒன்று கூடுவதன் ஊடாக, கொவிட் அதிகளவில் பரவும் அபாயம் எழுந்துள்ளது" எனத் தெரிவித்தார். (நி)

# ஜனாதிபதியின் சம்பளத்தை விட தாதியர் சேவைக்கு வசதிகள் அதிகம்

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் ஜனாதிபதியின் சம்பளம் 90 ஆயிரம் ரூபாய் மாத்திரமே எனவும் அந்த சம்பளத்துடன் ஒப்பிடும் போது, தாதிய சேவைக்கு அதனைவிட வசதிகள் கிடைப்பதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.



அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தாதியர்களுக்கு நியமனங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொழில் அல்ல.

இது சேவை. நீங்கள் செய்யும் சேவைக்கு கொடுப்பனவு, சம்பளம் வழங்கப்படுவது வேறு விடயம்.

எனினும் நாம் சிறந்த சேவையை நிறைவேற்றுவதற்காகவே தாதிய சேவையில் இணைக்கின்றோம் என தேரர் தெரிவித்தார். (நி)

# சுற்றுலா சென்ற இருவர் நுவரேலியாவில் மர்ம மரணம்

(ஹற்றன்)

குருநாகல் மாவட்டம் கொகரெல்ல பகுதியில் இருந்து நுவரெலியாவுக்கு சுற்றுலாப் பயணம் சென்ற குழுவில் இடம்பெற்றிருந்த கணவன், மனைவி, தங்கியிருந்த ஹோட்டல் அறையில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குடும்பத்தினருடன் நுவரெலியா சென்றிருந்த இந்த தம்பதி உள்ளிட்டோர் நள்ளிரவு வரை பாபிகியூ, அடுப்பில் இறைச்சியை சுட்டு சாப்பிட்டுள்ளனர்.

இதன் பின்னர் கணவனும் மனைவியும் கடும் குளிர் காரணமாக பாபிகியூ அடுப்பை அறைக்கு எடுத்துச் சென்று உறங்கியுள்ளனர்.

58 மற்றும் 59 வயதான இந்த தம்பதி மறுநாள் காலையில் எழுந்திருக்காத காரணத்தினால், குடும்பத்தினர் அவர்கள் தங்கி இருந்த அறையை திறந்துள்ளனர்.

அப்போது இரண்டு பேரும் இறந்த நிலையில் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை நடத்திய நுவரெலியா நீதவான் உடல்களை பிரேத பரிசோதனைகளுக்காக நுவரெலியா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியிடம் அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: 24 சூரி 6 செவ் 10 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: Professional in Banking and Finance Junior Executive Assistant<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/12356 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 12¾ சூரி,செவ் 6 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: உயர்தரம்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் அல்லது வெளிநாடு<br>தொ.இ:G/9228 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 17 சூரி 8 செவ் 10 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12357 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: சூரி,செவ் 1 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc Computer Science, Reading MBA Admin நிரந்தரம்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அல்லது நிரந்தர தொழில்<br>தொ.இ:G/9237 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா: சூரி 10 செவ் 5 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில் :BSc Software Engineer சைவ போசனம்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி மணமகள் சைவ போசனம் மட்டும்<br>தொ.இ: B/12358 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 5 சூரி 3 செவ் 5 இல் உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: College of Technology Following BSc (External) Extension Officer<br>எதிர்பார்ப்பு: உள்நாடு- அரச, தனியார் வெளிநாடு- Canda ,America, London Australia<br>தொ.இ:G/9238 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: 43¾ சூரி 11 செவ் 1 இல்<br>உயரம்: 162 cm<br>தகைமை/தொழில்: Q.S அவுஸ்திரேலியா<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/12359 | பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: சூரி, செவ் 9 இல்<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்<br>தொ.இ:G/9258 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நாய்க்குட்டியை பிரிய மனமின்றி உக்ரேய்னிலிருந்து நாடு திரும்ப இந்திய மாணவர் மறுப்பு

(கீவ்)

உக்ரேய்னில் இருந்து இந்திய மாணவர்கள் வெளியேறி வருகிறார்கள்.

இந்த நிலையில் நாய்க்குட்டியை பிரிந்து வர மனம் இல்லாததால் இந்திய மாணவர் ஒருவர் நாடு திரும்ப மறுத்து விட்டார்.

கிழக்கு உக்ரேய்னில் உள்ள கார்கீவ் தேசிய பல்கலைக்கழகத்தில் 3 ஆம் ஆண்டு படிக்கும் ரிஷப்கவுசிக் என்ற மாணவர், தெருவில் இருந்து மீட்கப்பட்ட ஒரு நாய்க்குட்டியை வாங்கி வளர்த்து வருகிறார்.



இந்திய மாணவர்கள் பலர் நாடு திரும்பி வரும் நிலையில் ரிஷப்கவுசிக் தனது வளர்ப்பு நாய்க்குட்டியுடன் இந்தியா திரும்ப விரும்பினார்.

ஆனால் அவருக்கு நாய்க்குட்டியை உடன் அழைத்து செல்ல அனுமதி கிடைக்கவில்லை.

இதனால் அவர் இந்தியா திரும்ப மறுத்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்,

'மகிபூ' என்று பெயரிடப்பட்ட எனது நாய்க் குட்டியை இங்கேயே விட்டு வர எனக்கு மனமில்லை. இங்கே இருப்பது ஆபத்தானது என்பதை நான் அறிவேன். ஆனாலும் நாய்க்குட்டியை கைவிட என்னால் முடியாது.

அதை நான் கைவிட்டு விட்டு நாடு திரும்பி விட்டால், நாய்க் குட்டியை யார் பார்த்துக் கொள்வார்கள்? என அவர் கவலை வெளியிட்டார். (நி)

## மும்...

## ஏவுகன...

## தீப்பற்...

(கீவ்)

### உக்ரேய்ன் தலை... தலைநகருக்குள் ... எதிர்த் தாக்குதலை... படைகள் நேற்று ... தாக்குதல்களை ந...

ஏவுகணை தாக்குதல்களில் பல கட்டடங்கள், வாகனங்கள் நொறுங்கி, தீப்பற்றி எரிகின்றன.

ஏற்கனவே தாக்குதல் குறித்து விடுக்கப்பட்ட எச்சரிக்கையை அடுத்து மக்கள் பதுங்கு குழிகளில்

### யுத்தத்தை நிறுத்துங்கள்

## ஒரு கழிவறையை 500 பேர் பயன்படுத்துகின்றோம்

## தமிழக மாணவி மன்றாட்டம்

(கீவ்)

உக்ரேய்னில் தாங்கள் பதுங்கியிருக்கும் இடத்தின் மோசமான நிலையை விளக்கி தமிழக மாணவி வீடியோ வெளியிட்டுள்ளார்.

அதன்படி மெட்ரோ சுரங்கத்தில் 500 பேர் வரை ஒரே கழிவறையைப் பயன்படுத்தி வருவதாக அந்த மருத்துவ மாணவி தெரிவித்துள்ளார்.

அங்கு ஒரேயொரு கழிவறை உள்ள நிலையில், போதிய தண்ணீரும் இல்லாமல் அத்தனை பேரும் அதனை 3 நாட்களாகப் பயன்படுத்தி வருகிறோம்.

இதனால் நோய்த்தொற்று அபாயம் ஏற்படும் வாய்ப்புள்ளதாகவும், இந்த மோசமான மற்றும் அருவருப்பான நிலை இன்னும் எத்தனை நாட்கள் நீடிக்கும் என்பது தனக்கு தெரியவில்லை எனவும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

தங்களுடைய தற்போதைய சூழலை விளக்கி, மனிதாபிமானத்தை விட பெரியது ஒன்றும் இல்லை என்றும் எனவே போரை நிறுத்துமாறும் ரஷ்ய ஜனாதிபதி புடினிடம் மன்றாடிக் கேட்டு கொண்டுள்ளார் அப்பெண். (நி)

## ரஷ்யாவுக்கு கண்டனம் உக்ரேய்னுக்கு ஆதரவு

### உலகெங்கும் வலுக்கும் போராட்டங்கள்




(டோக்கியோ)

உக்ரேய்ன் மீது ரஷ்ய படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. தலைநகர் கீவை சுற்றி வளைத்து ரஷ்ய படைகள் தாக்குதல் நடத்துவதால், பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது. ரஷ்ய படைகளை எதிர்த்து உக்ரேய்ன் படைகளும் சண்டையிட்டு வருகின்றன.

போர் தீவிரமடைந்ததால் பொதுமக்கள் பதுங்கு குழிகளிலும் மெட்ரோ ரயில் நிலையங்களிலும் தஞ்சம் அடைந்துள்ளனர். போரை நிறுத்த வேண்டும் என உலக நாடுகள் கேட்டுக் கொண்டுள்ளன. எனினும் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை இப்போது இல்லை.

இது ஒருபுறமிருக்க ரஷ்யாவின் படையெடுப்புக்கு எதிராகவும், உக்ரேய்ன் மக்களுக்கு ஆதரவாகவும் உலகின் பல்வேறு நாடுகளில் மக்கள் பெருந்திரளாக கூடி போராட்டம் நடத்தியவண்ணம் உள்ளனர்.

டோக்கியோ, ஜியார்ஜியா, சிட்னி, ஆர்ஜென்டினா, அவுஸ்திரேலியா போன்ற இடங்களில் மழையையும் பொருட்படுத்தாது போரை நிறுத்துமாறும் புடின் மீது கடுங் கோபத்தையும் போராட்டக்காரர்கள் வெளிப்படுத்தினர். (நி)

### உக்ரேய்ன் போரை தீர்க்க உலகம் முயற்சிக்கும் வேளை

## 8 ஆவது ஏவுகணையை ஏவியது வடகொரியா

(பியாங்யாங்)

வடகொரியா இந்த ஆண்டின் 8 ஆவது ஏவுகணை சோதனையை நேற்றுக் காலை நடத்தியுள்ளதாக தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

வடகொரிய தலைநகர் பியாங்யாங்கிற்கு அருகில் உள்ள சுனானில் இருந்து கிழக்குக் கடற்கரையில் உள்ள கடலை நோக்கி பாலிஸ்டிக் ஏவுகணை ஏவப்பட்டதாக தென் கொரியாவின் கூட்டுப் படைத் தலைமையகம் கூறியுள்ளது.

இதே தளத்தில் இருந்து ஜனவரி 16 ஆம் திகதி இரண்டு குறுகிய தூர பாலிஸ்டிக் ஏவுகணைகள் உட்பட பல ஏவுகணை சோதனைகளை வடகொரியா நடத்தியுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பரிசோதிக்கப்பட்ட ஏவுகணை அதிகபட்சமாக 620 கி.மீ. தூரம் வரை பறந்தது என்று தென் கொரி யாவின் கூட்டுப்படைத் தலை மையகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து வடகொரியா அடிக்கடி ஏவுகணை சோதனைகளை முன்னெடுத்து வருகிறது.

வடகொரியா தொடர்ந்து பாலிஸ்டிக் ஏவுகணை தொழில்நுட்பத்தை விரைவாக உருவாக்கி வருகிறது என ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் நோபுவோ கிஷி தெரிவித்தார்.

உக்ரேய்ன் போரைத் தீர்க்க உலகம் முயற்சித்து வரும் நேரத்தில் ஒரு பாலிஸ்டிக் ஏவுகணையை வடகொரியா ஏவியுள்ளமை உலக மற்றும் கொரியப் பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத் தன்மைக்கு உகந்த செயற்பாடு இல்லை என தென்கொரிய ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# முனைத் தாக்குதல் தீவிரம்

# ணைகளால் அதிரும் உக்ரேய்ன்

# றி எரியும் எண்ணெய்க் கிடங்கு!

**லைநகர் கீவ்வை நோக்கி முன்னேறி வரும் ரஷ்யப் படைகள் ள் நுழைய முடியாதவாறு உக்ரேய்னிய படைகள் கடும் லை தொடுத்து வரும் நிலையில் உக்ரேய்ன் மீது ரஷ்யப் று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் சரமாரி ஏவுகணைத் நடத்தி வருகின்றன.**



பதுங்கியுள்ளதாக அங்குள்ள சர்வ தேச செய்தியாளர்கள் தெரிவிக் கின்றனர்.

ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் கீவ் நகரின் வாசில்கிவ் பகுதியில் உள்ள எண்ணெய்க்கிட ங்கு ஒன்று நேற்றுக் காலை தீப்பற்றி எரிவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

உள்ளூர் ஊடகங்களும் இதனை உறுதிப்படுத்தின.

எண்ணெய்க் கிடங்கிலிரு ந்து பெருமளவில் தீ வெளி யாகும் வீடியோ ஒன்று சமூக வலைத்தளத்தில் வெளியாகி யுள்ளது.

இந்நிலையில் ரஷ்யா ஏவு கணை தாக்குதலுடன், உக் கிர வான்வழித் தாக்குதலை யும் நடத்தியவாறு தொடர் ந்து முன்னேற முயற்சிக்க லாம் என எச்சரிக்கப்பட் டுள்ளது.

இதனால் மக்கள் நிலத்தடி பதுங்கு குழிகளில் தஞ்சமடை ந்துள்ளனர். (நி)

## அதிரும் வெடியோசைக்கு நடுவில் பிறந்த பெண் குழந்தை

### சுதந்திரம் எனப் பெயரிட்டது உக்ரேய்ன்

(கீவ்)

உக்ரேய்ன் தலைநக ரான கீவ்வில் ரஷ்ய படை களின் தாக்குதலுக்கு பயந்து பொதுமக்கள் மெட்ரோ ரயில் நிலையங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.



அவ்வாறு தஞ்சமடைந்தி ருந்த 23 வயதான பெண் ஒருவருக்கு போருக்கு மத்தி யில் வெடி குண்டுகளின் சத்த த்தில் நேற்று முன்தினம் அழகான பெண் குழந்தை பிறந்துள்ளது.

அந்த குழந்தைக்கு மியா என்று பெயரிடப்பட்டுள் ளது.

இது குறித்து உக்ரேய் னின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் டுவிட்டர் பக்கத்தில், "பூமிக்கு அடியில், எரியும் கட்டடங்கள் மற்றும் ரஷ்ய தாங்கிகளுக்கு இடை யில் தங்குமிடம் ஒன்றில் ஒரு குழந்தை பிறந்துள்ளது.

அவளை சுதந்திரம் என்று அழைப்போம்! உக்ரே ய்னை நம்புங்கள்" என்று பதிவிட்டுள்ளது. (நி)

## உக்ரேய்னில் இருந்து மீண்ட 250 இந்திய மாணவர்கள்



(டில்லி)

உக்ரேய்னில் இருந்து இந்தியர்கள் 219 பேரை மீட்ட முதல் விமானம் மும்பை விமான நிலைய த்திற்கு நேற்று முன்தினம் இரவு வந்துள்ள, நிலையில் 250 பேருடன் இரண் டாவது விமானம் நேற்று அதிகாலை டில்லி வந்த டைந்துள்ளது.

ரஷ்யா தாக்குதல் நடத்தி வருவதைடுத்து உக்ரேய்ன் அரசாங்கம் தனது வான் எல்லைகளை மூடியுள் ளது.

இதன் காரணமாக அயல் நாடுகள் வழியாக உக்ரேய்னிலுள்ள இந்தியர்களை மீட்க தூதரக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்ற னர்.

வீதி மார்க்கமாக உக்ரேய்ன் - ருமேனியா எல்லை வந்தடைந்த இந்தியர்கள், அதிகாரிகள் மூலம் ருமேனியாவில் உள்ள புகாரெ ஸ்ட் நகரத்திற்கு அழைத்து வரப் பட்டனர்.

பின்னர் அங்கிருந்து ஏர் இந்தியா விமானம் மூலம் இந்தி யா வுக்கு அனுப்பி வைக்கப்பட்ட னர்.

மத்திய அரசு இந்த மீட்பு நடவடிக்கைக்கு ஒப்ரேசன் கங்கா என பெயரிட்டுள் ளது. (நி)

## இலக்குகளை எட்டும் வரை போர் தொடரும்

### ரஷ்யா அதிரடி அறிவிப்பு

(மொஸ்கோ)

இலக்குகளை எட்டும் வரை போர் தொடரும் என்று ரஷ்ய பாதுகாப்பு சபையின் துணைத் தலைவர் தெரிவித் துள்ளார். உக்ரேய்ன் - [illegible] மோதல் நேற்று 3 [illegible] நாளாக தீவிரமடைந்து வரும் நிலையில், உக்ரேய்ன் மீதான போரை நிறுத்துவதற்கு ரஷ்யாவுக்கு உலக நாடுகள் தொடர்ந்து அழுத்தம் கொடு த்து வருகின்றன.

இந்நிலையில், அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் ரஷ்யா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணியை மீட்டுத்தருமாறு கோரி

# வீதி மறியல் போராட்டம்

(குருமன்காடு)

**வவுனியா தரணிக் குளத் தில் காணியினை மீட்டுத் தருமாறு கோரி பொதுமக்கள் நேற்று முன்தினம் தரணிக்குளம் பிரதான வீதியினை மறித்து போரா ட்டத்தில் ஈடுபட்டனர்.**



2001 ஆம் ஆண்டு தரணி க்குளம் பகுதியில் அரை ஏக்கர் காணி வீதம் வழங்கப்பட்டு 250 குடும்பத்தினர் மீள்குடி யேற்றம் செய்யப்பட்டனர். அதன் பின்னர் அப்பகுதி மக் கள் தமது வாழ்வாதாரத் தினை மேம்படுத்துவதற்காக 2003 ஆம் ஆண்டு தரணிக் குளம் பிற்பகுதியில் காடாக காணப்பட்ட பகுதியை வெட்டி விவசாயம் மேற்கொண்டி ருந்ததுடன், தற்போது 612 குடும்பங்கள் வாழ்ந்து வரு கின்றன.

இந்நிலையில் 2014 ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டத்தின் கீழ் பேராறு, நீர் வழங்கல் வடிகாலமைப்பு திட்டத்தில் உள்வாக்கப்படும் காணிகளிற்குப் பதிலாக முதலி யார்குளத்தில் 15 ஏக்கர் அரச காணியினையும், பத்தினியார் மகிழங்குளத்தில் 120 ஏக்கர் அரச காணியினையும், கற் குளம் கிராமத்தில் 40 ஏக்கர் அரச காணியினையும் நெற் செய்கைக்காக வழங்குவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு கூட் டத்தில் மாவட்ட காணிப் பயன் பாட்டு திட்டமிடல் குழுவினால் அனுமதி வழங்கப்பட்டு பேராறு நீர்த்தேக்கமும் நிர்மாணிக்கப்பட்டது.

கற்குளம் கிராமத்தில் 40 ஏக்கர் அரச காணியினை வழ ங்காது அவர்களை தரணிக் குளம் புதியநகர் பகுதியில் மேட்டுக்காணியில் குடியேற்று வதற்கு பிரதேச செயலகத்தினர் நடவடிக்கையினை முன்னெ டுத்து வருகின்றனர். இதன் காரணமாக அங்கு வசிக்கும் 612 குடும்பத்தினர் பாதிப்ப டைந்துள்ளனர். அரசாங்கத்தி னால் பேராறு நீர்த்தேக்கத்தின் கீழ் வசித்தவர்களுக்கு நெற் செய்கைக்கான காணியே வழ ங்குவதற்கு அனுமதி வழங் கியுள்ள போதிலும் தற்போது 612 குடும்பத்தினர் வசிக்கும் மேட்டுக்காணியினை பிரதேச செயலகத்தினர் வழங்க முன் வந்துள்ளனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இக்கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப் பட்டது. (4-6-250)

# காணி அபகரிப்பிற்கு எதிராக நீதிமன்றை நாடவுள்ள மக்கள்

(முல்லைத்தீவு)

இலங்கை கனிப்பொருள் கூட்டுத்தாபனம், இல்மனைட் அகழ்வதற்காக முல்லைத்தீவு - கொக்கிளாய் பகுதியில் அமைந்துள்ள கம்பித் தறை யில் 44 ஏக்கருக்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் காணி களையும், வில்லுவெளியில் 60 ஏக்கருக்கும் மேற்பட்ட தமி ழர் நிலங்களையும் ஆக்கிர மித்துள்ளது.

இவ்வாறு ஆக்கிரமிக்கப் பட்டுள்ள தமது விவசாய நிலங்களை விடுவிக்குமாறு கேட்டு, வழக்குத் தொடர்வத ற்கான ஏற்பாடுகளில் கொக்கி ளாய் பகுதி தமிழ் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் ஒழு ங்குபடுத்தலில், பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட் டத்தரணியுமான எம்.ஏ.சுமந் திரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணி தனஞ் சயன் ஆகியோர் தமிழ் மக்களின் சார்பில் நீதிமன்றில் வழக்குத் தொடர்வதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருகின் றனர்.

அத்தோடு சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக் கான நிறுவனம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழக்குத் தொட ர்வதற்குரிய பங்களிப்புக்களை முன்னெடுத்துள்ளது. அந்த வகையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் வழக்கிற்கான ஆவணங்களைத் திரட்டும் பணி ஒன்று நேற்று முன்தி னம் கொக்கிளாயில் இடம் பெற்றது. (4-6)

# மதுபான போத்தல்களுடன் ஒருவர் கைது



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மயில்வாகனபுரம் பகுதியில் 17 மதுபான போத் தல்களுடன் ஒருவர் பொலி ஸரால் நேற்று கைது செய்யப் பட்டார். கைது செய்யப்பட்டவரை இன்று நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாக தருமபுரம் பொலிஸட நிலைய பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்தார். (4-6-316)

# இன, மத பேதமின்றி காணிப்பிணக்குகள் தீர்க்கப்படும்

## காணி அமைச்சர் உறுதி

(நெளுக்குளம்)

இந்த நாட்டின் பிரஜை என்ற வகையில் எந்த ஒரு பகுதியிலும் வாழ்வதற்கான உரிமை அனைவருக்கும் இருப்பதாக காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரி வித்தார்.



வன்னி மாவட்ட காணிப் பிரச்சினைகள் தொடர்பான நடமாடும் சேவை ஒன்று வவு னியாவில் நேற்று இடம்பெற் றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரி வித்த அவர், இன,மத வேறு பாடில்லாமல் வடபுலம், தென் புலம் என்ற பேதங்கள் இல் லாமல் இந்த காணி தொடர் பான விடயங்களையும் பிரச் சினைகளையும் தீர்க்க வேண் டும் என்ற உயரிய நோக்கோடு இந்த செயற்பாடு முன்னெடு க்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு மக்களை நாம் கவனிப்பதில்லை என்ற குறை பாடு சொல்லும் கருத்துக்களும் உண்டு. அந்தக் கருத்துக்க ளுக்கு ஒருபோதுமே இடமி ல்லை. காணிப் பிரச்சினை களை தீர்ப்பதற்கான இந்த நடமாடும் சேவை முதன் முதலில் வட பிரதேசத்தில் ஆரம்பித்து வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மொழியிலே உங்களோடு உரை யாட முடியாததையிட்டு மன வருத்தம் அடைகின்றேன். அனைவருக்கும் பிரச்சினை கள் இருக்கின்றன. அவற்றை நாம் இனம்கண்டு அதனை சாதகமாக தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற [illegible] யில் இவ்வாறான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (4-6-299)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 200 | 240 | 250 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 350 | 350 |
| தக்காளி | 220 | 240 | 200 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 |
| கோவா | 100 | 100 | 120 | 120 |
| கரட் | 350 | 350 | 330 | 400 |
| பூசணி | 140 | 140 | 140 | 160 |
| புடோல் | 200 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 140 | 100-300 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 120-160 | 180 |
| பாகற்காய் | 300 | 250 | 350 | 350 |
| வெண்டிக்காய் | 180 | 150 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 300 | 300 | 250 | 320 |
| லீக்ஸ் | 130 | 100 | 140 | 150 |
| பீற்றூட் | 180 | 200 | 280 | 200 |
| கறிமிளகாய் | 350 | 300 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 1000 | 1200 | 1000 | 1200 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 100 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 200 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 100 | 140 | 240 |
| முள்ளங்கி | 50 | 120 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | -- | 120 | 80 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுப்படுத்தப்பட்ட பேருந்து சேவைகள்

## தனியார் பேருந்து சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

**எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இன்று முதல் பேருந்து சேவைகள் மட்டுப்படுத்தப்படும் என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

அத்தியாவசிய நேரங்களை முன்னுரிமைப்படுத்தி அதற்கான அட்டவணைகளை தயாரிக்குமாறு போக்குவரத்து ஒழுங்குமுறை அதிகாரிகளுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். வழக்கமான பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த போதிய டீசல் இல்லை.

சிக்கனமான முறையில் வேலை செய்ய வேண்டிய நேரம் இது எனவும் எனவே நாளை காலை முதல் பேருந்து பயண எண்ணிக்கையை குறைக்க முடிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# பயங்கரவாத தடைச்சட்டம் எனும் கரும்புள்ளியை உடனடியாக நீக்குங்கள்

## சட்டத்தரணிகள் அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முழுமையாக இல்லாதொழிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும் என்றும், அதற்கமைய நாட்டின் சட்டக்கட்டமைப்பில் படிந்திருக்கும் கரும்புள்ளியை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சட்டத்தரணிகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தற்காலிக சட்டமாகக் கொண்டுவரப்பட்டு, பின்னர் நிரந்தர சட்டமாக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்கப் பயங்கரவாதத்தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு அண்மையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

இந்தச் சட்டத்தின் சில சரத்துக்கள் நாட்டின் அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறும் வகையிலும் ஜனநாயகத்திற்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் மதிப்பளிக்கின்ற நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பான பிரகடனங்களுக்கு முரணான வகையிலும் அமைந்துள்ளன.

இருப்பினும் பயங்கரவாதத்திற்கு எதிராகவும் நாட்டின் தேசிய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டும் முன்னெடுக்கப்படும் சட்ட உருவாக்கங்களில் தலையீடு செய்யும் அதிகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு இல்லை என்று ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா தெரிவித்திருப்பதாக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் குறித்து நாம் ஆச்சரியமடைகின்றோம்.

மனித உரிமைகள்சார் விடயத்தில் அரசாங்கம் முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைகளை வழங்கும் அதிகாரம் ஆணைக்குழுவிற்கு உள்ளது.

எனவே மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு மதிப்பளிக்குமாறும் எமது சட்டக்கட்டமைப்பில் படிந்திருக்கும் கரும்புள்ளியை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் நாம் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# ரஷ்யாவுக்கான தேயிலை ஏற்றுமதியில் இதுவரை பிரச்சினை இல்லை




(கொழும்பு)

ரஷ்யாவுக்கான தேயிலை ஏற்றுமதியில் இதுவரையில் பிரச்சினை ஏற்படவில்லையென இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது.

நாட்டிலிருந்து தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் ஈராக், துருக்கியை தொடர்ந்து மூன்றாவது இடத்தில் ரஷ்யா உள்ளது.

2021 ஆம் ஆண்டு ரஷ்யாவிற்கு 29 மில்லியன் கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது.

உக்ரேய்னுக்கு ஆதரவு வழங்கும் வகையில் பல நாடுகள் ரஷ்யாவுக்கான பொருளாதார தடைகளை விதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சுற்றுலாவை மேம்படுத்த விரிவுபடுத்தப்படும் மதுபான விற்பனை

(கொழும்பு)

சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து விருந்தகங்கள், விருந்தினர் இல்லங்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் மென்மையான மதுபானங்கள் - பியர் மற்றும் வைன் விற்பனைக்கு அரசாங்கம் அனுமதி வழங்கவுள்ளது.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கடற்கரைகள் மற்றும் பூங்காக்கள் போன்ற பொது இடங்களில் மது அருந்துவதையும் சட்டவிரோத மதுபானம் வழங்குவதையும் இது தடுக்கும் என்றும் இந்த திட்டம் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த சேவைகளை வழங்கும்," என்றும் அவர் குறிப்பிட்டார். (நி)

# இன்று ஒரு தகவல்

## கணக்குப் பார்க்கலாமா?

அச்சடிக்கப்பட்ட அரசின் தாள்களையே பெரிதாக எண்ணுகிறார்கள்.

அன்பைப்பெறத்தவறி உறவுகளைக் கெடுத்துக் கொள்கிறார்கள், சிலர்.

சிறு தொகைகளை கணக்குப் பார்க்கிறவர்கள் பெருந் தொகைகளைக் கோட்டை விடுகிறார்கள்.

நாம் ஒருவருக்கு ஒன்றை மனமுவந்து செய்தால் அது பத்தாகப் பெருகி நம்மிடமே திரும்பி வரக்கூடிய வாய்ப்புக்கள் இந்தக் காலத்தில் இன்னமும் இருந்து வருகின்றன.

வேறுவிதமாகச் சொல்லப்போனால், நாம் மற்றவர்களுக்குச் செலவழிக்கும் தொகைகள் விதைகள் போன்றவை. அவற்றைச் சரியான நேரத்தில், சரியான இடத்தில் பயிரிட்டால் நிச்சயம் விளைந்து பன்மடங்கு பலனைத் தரும்.

காசைப் பெரிதாக எண்ணுகிறவர்கள் ரொம்பவும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்கிறோம் என்று எண்ணிக்கொண்டு, விதைக்காமலேயே இருந்து விடுகிறார்கள். விளைச்சலைப் பற்றி ஒரு விவசாயி சற்றும் சிந்திக்காமல் இருந்தால் அது எவ்வளவு தவறானதோ, அவ்வளவு தவறானது நாம் கணக்குப் பார்ப்பது.

நம்மால் மற்றவர்களுக்கென ஒதுக்கப்படும் செல வினங்கள் நமக்கு நேரடிப் பலனைத் தரும். அல்லது ஒருவகை மன நிறைவையேனும் ஏற்படுத்தும். அவர்களிடமிருந்து அதைத் திரும்ப எதிர்பார்க்கும் போதுதான் வெறுப்பு மிஞ்சுகிறது.

நாம் நம் எல்லைக்கு உட்பட்ட செலவுகளைச் செய்தால் போதுமானது.

"நான் இரண்டு முறை அவள் வீட்டுக்குப் பழங்கள் வாங்கிக் கொண்டு போனேன். அவளோ என் வீட்டுக்கு வெறுங்கையுடன் வந்தாள்."

"நான் அவனை மூன்றாவது முறையாக சினிமாவுக்கு டிக்கெட் எடுத்துக் கூட்டிப் போனேன். பாவிப்பயல்! அவன் இடைவேளையில்கூடத் தன் மணிப் பர்ஸை வெளியே எடுக்கவில்லை."

என்றெல்லாம் தினமும் பல்வேறு விதமான புகார்களைக் கேட்டுக் கேட்டுக் காது புளித்துப் போகிறது.

இவர்கள் சில உண்மைகளை உணர வேண்டும். அவர்களது சக்தி அல்லது மனப்பான்மை அவ்வளவு தான் என்பது ஒன்று.

பல வாய்ப்புகள் ஒருவருக்குத் தரப்பட வேண்டும் என்பது மற்றொன்று.

இவர்களைப் பார்த்து உங்கள் சுபாவத்தை நீங்கள் மாற்றிக் கொண்டால் அது அவர்களுக்கு கிடைத்த வெற்றி; அதே நேரத்தில் அது உங்களுக்குக் கிடைத்த தோல்வி.

தொடர்ந்தும் மனம் மாறாமல் செயற்பட்டு வந்தால் கணக்குப் பார்ப்பவர்களையும் நம் பெருந்தன்மையின் மூலம் சரிசெய்ய முடியும். குற்ற உணர்வு அவர் களைக் கொல்ல ஆரம்பிக்கும். உங்கள் வழிக்கு அவர்கள் வந்து விடுவார்கள்.


பணத்தை மட்டுமே பெரிதாக நினைக்கிறோம் என்ற பொதுவான எண்ணம் நம்மைச் சுற்றியவர்களிடம் தோன்றிவிட்டால் , அது ஒரு தோல்வியான வாழ்வு.

குறுகிய மனப்பான்மை நட்பையும் உறவையும் கூடக் குறுக்கிவிடும்.

பர்ஸை திறக்காதவரை மற்றவர்களின் இதயங்களை நம்மால் ஒருக்காலும் திறக்க இயலாது.


**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலி மாமா கதைகள்

# மர்ம வேலைக்காரி



சரிதா ஏழை வீட்டுப் பெண். அவளது சிநேகிதி சுமதியோ பணக்காரி. ஆனால் இருவரும் ஆருயிர்த் தோழிகள். ஏழையானாலும் சரிதா எதுவும் யாரிடமும் கேட்க மாட்டாள்.

ஒருநாள் சுமதியின் வீட்டிற்கு ஒரு நகை வியாபாரி வந்தான். அவன் பல புதுவித நகைகளைச் சுமதியின் தந்தையிடம் காட்டினான். அவரும் அவற்றைக் கண்டு அழகாக இருந்த நான்கு நகைகளை வாங்கிக் கொள்வதாகக் கூறினார். வியாபாரியோடு வந்த வேலையாள் வடிவேலன் அவற்றை எடுத்துக் கட்டிக் கொடுத்தான்.

வடிவேலன் இளைஞன், அழகன், சுறுசுறுப்பாக இயங்குபவன். அவனைக் கண்ட சுமதி தன் மனதில் அவனையே தான் மணப்பது எனத் தீர்மானித்துக் கொண்டாள். ஆனால் அவன் எண்ணத்தை அறிந்து கொள்ள அவள் தானே அவனிடம் நேராகக் கேளாமல் தன் சிநேகிதி சரிதாவைத் தூது அனுப்பினாள்.

சரிதாவிடமிருந்து விபரம் அறிந்த வடிவேலன் "நான் உன் சிநேகிதியை மணந்து கொள்ள விரும்பவில்லை. உன்னையே மணந்து கொள்கிறேன்" என்றான்.

சரிதாவும் வடிவேலன் கூறியதை சுமதியிடம் தெரிவித்தாள். சுமதிக்குக் கோபம் வந்தாலும் தன்னால் எதுவும் செய்ய முடியாதெனக் கண்டு அவள் கூறியபடியே செய்வதாகக் கூறி அனுப்பினாள். விரைவிலேயே சரிதாவிற்கும் வடிவேலனுக்கும் திருமணம் நடந்தது. சில நாட்களுக்குப் பின் சுமதியும் ஒரு பணக்காரனை மணந்து கொண்டாள்.

சில ஆண்டுகள் கழிந்தன. சரிதா சங்கனூரில் இருப்பதாக சுமதி கேள்விப்பட்டாள். தன்னை நிராகரித்த வடிவேலன் சரிதாவுடன் எப்படிக் குடித்தனம் நடத்துகிறான் என்று காண அவள் தன் வேலைக்காரியை அழைத்துக்கொண்டு சங்கனூருக்குச் சென்றாள்.

சுமதியைக் கண்ட சரிதா பெருமகிழ்ச்சி கொண்டு அவளை வரவேற்றாள். சுமதியும் அங்கு வடிவேலனும் சரிதாவும் பாங்காகக் குடித்தனம் நடத்துவதைக் கண்டு பொறுமிப் போனாள். அவள் மனதில் பொறாமையே அதிகரித்தது. மறுநாள் சுமதி சரிதாவிடம் அனுதாபம் காட்டுபவள் போல "நீயே வீட்டு வேலை எல்லாம் செய்கிறாயே, வேலைக்காரி இல்லையா?" என்று குத்தலாகக் கேட்டாள். சரிதாவோ "இல்லாமல் என்ன! அவள் உன் கண்ணில் படாமல் வேலைகளை செய்து விட்டு போய் விடுவாள். நீயே என் வீட்டைப் பார், எவ்வளவு சுத்தமாக இருக்கிறது!" என்றாள்.

சுமதியும் அப் படியா? எனக் கூறி இரண்டு மூன்று நாட்கள் அந்த வேலைக்காரியை பார்க்க முயன்றும் முடியாது போயிற்று. அவள் தன் ஊருக்கு கிளம்பினாள். அப்போது சரிதா ஐந்தாறு புடைவைகளைக் காட்டி இவற்றில் ஒன்றை என் நினைவாக எடுத்துக் கொள் என்றாள்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்




மணக்கோலத்தில் சீதையைக் கண்ட மாண்புமிக்க வசிட்டர், அங்கு சனகன் மகளைக் காணவில்லை; "திருமகள் தசரதன் மருமகள் ஆகிறாள்" என்பதை உணர்ந்தார். "தாமரை மலரில் உறையும் கமலச் செல்வியே அவள்" என்று அந்த முனிவர் பாராட்டினார்.

தசரதன் வரப்போகும் தன் மருமகளைக் கண்டதும் "அவள் தனக்குக் கிடைத்த வரப்பிரசாதம்" என்றே கருதினான். எத்தனையோ செல்வங்கள் பெற்றிருந்தும் அவை அவனுக்கு மன நிறைவைத் தரவில்லை; அவை செல்வமாகப் படவில்லை; அவளை மருமகளாக அடைந்ததையே அருந்தவம் என்று கருதினான்; "இதுவே திரு" என்று எண்ணினான். "திரு என்பதற்கு உரு" இது என்பதை அறிந்தான்.

அவைக் கண் வந்திருந்த நவையில் தவசிகளைச் சீதை முதற்கண் வணங்கினாள்; இராமனைப் பெற்ற பெரியோன் என்பதால் தசரதன் திருவடிகளைத் தொட்டு ஆசி பெற்றாள்; பின் தன் தந்தை சனகன் அருகில் வந்து, அவன் பக்கத்தில் இருந்தாள்; அங்கு குழுமியிருந்த விழுமியோரும் ஆகிய நகர மாந்தரும் நன்கலமாதரும் அவளைத் தெய்வம் என மதித்துப் போற்றினர்.

### முனிவர் பாராட்டுரை

ஆசானாய் வந்த விசுவாமித்திரர், பொன்னொளிர் மகளைக் கண்டதும் பொலிவு பெற்ற மனத்தினர் ஆயினர். மேனகையைக் கண்டு அவள் அழகிற்குக் குழைந்து அவர் தம் தவத்தையே பரிசாகத் தந்தவர். மேனகையைக் கண்டு காதற் பார்வை; அழகு ரசனை அவரை விடவில்லை. "நச்சுடை வடிக்கண் மலர் நங்கை இவள் என்றால், இச்சிலை கிடக்கட்டும்; ஏழுமலையாயினும் இவளுக்காக இருக்கலாம்" என்று பாராட்டினார். "காதற் பெண்கடைப் பார்வையில் விண்ணையும் சாடலாம்" என்ற பாரதியின் வாசகம் இந்த மாமுனிவர் பேச்சில் வெளிப்பட்டது.

நாள் தள்ளிப்போட அவர்களால் முடியவில்லை. 'அடுத்த நாளே மணநாள் என்று முடிவு செய்யப்பட்டது. இடையிட்ட அந்த ஓர் இரவும் காதலர் இருவர்களுக்கும் ஒரு யுகமாகக் கழிந்தது. நாளும் கிழமையும் காட்டி, இளையவரைச் சேராதபடி தடுக்கும் முதியவர் செயலைச் சாடினர். மறுநாள் வருகைக்காக எதிர்பார்த்து வாடினார்.

### மண விழா

வசிட்டர் தலைமையில் திருமணம் நடந்தேறியது. மணத்தவிசில் மங்கை இளநங்கை சீதையும் அடல் ஏறு போன்ற விடலையாகிய இராமனும் இருந்த காட்சியைக் கண்டவர் மனம் குளிர்ந்தது. தன் மகளை மருமகன் கையில் சனகன் ஒப்பு வித்தான்; ஆசிகள் நல்கினான்.

"நீவிர் இருவரும் வீரனும் வாளும் போலவும், கண்ணும் இமையும் போலவும், கரும்பும் சாறும் போல வும், பூவும் மணமும் போலவும், நிலவும் வானும் போலவும், அறிவும் அறமும் போலவும் இணைந்து வாழ்வீராக" என வாழ்த்தினான்.

அவள் மெல்லிய கரங்களைப் பிடித்து இராமன் கைகளில் தந்து, சடங்கின்படி அவளை ஒப்புவித்தான். அவள் மலர்க் கரங்களைப் பற்றி இராமன் அன்று முதல் அவள் இன்னுயிர்த் துணைவன் ஆயினான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ வழியில்லை என்று கூறிக்கொண்டு சோம்பலாய் இருப்பவரைப் பார்த்து பூமித் தாய் கேலி செய்வாள். ~ வள்ளுவர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii.lk

# காணி நிலம் எங்கும் விவசாயம் செய்வோம்

காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும் என்றான் பாரதி.

ஏழ்மைக் கவிஞனான பாரதி தன் வறுமை நீங்க வேண்டுமாயின் காணி நிலம் வேண்டும் என்று முடிவு செய்தான்.

அன்னை பராசக்தியிடம் அவன் அதனை வரமாகக் கேட்கின்றான்.

தன் குல தெய்வமாகிய பராசக்தியிடம் வரம் கேட்கும் பாரதி; புதையல் வேண்டு மென்றோ, அட்சய பாத்திரம் அருள வேண்டு மென்றோ, தொடுவதெல்லாம் தங்கமாக மாறவேண்டுமென்றோ வரம் கேட்கவில்லை.

மாறாக தன் முயற்சிக்கு – உடல் உழைப்புக்கு மூலதனமாக இருக்கக்கூடிய காணி நிலத்தைத் தந்தால், அங்கே தென்னை வைத்து மரக்கறி நாற்றுக்கள் நட்டு என் சீவியத்தை நடத்துவேன் – என் சொந்தக் காலில் நிற்பேன் என்கிறான் பாரதி.

காணி நிலம் வேண்டும் பராசக்தி என்ற பாரதியின் கோரிக்கை அவன் சார்ந்ததன்று. மாறாக இந்த உலகம் மக்கள் சார்ந்தது.

ஆம், காணி நிலம் இருந்தால் உழுது பயிர் செய்து இவ்வுலகைக் காக்க முடியும்.

ஆகையால் காணி நிலம் வேண்டும் என்று காணி நிலத்திற்கான விண்ணப்பத்தை பராசக்தியிடம் சமர்ப்பிக்கின்றான் பாரதி.

ஆக, பொதுநிலைக் கவிஞனாகிய பாரதி மேற்போந்த தனது கவிதை வரிகளுக்கூடாக ஒரு பெரும் செய்தியைப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துகின்றான்.

அதாவது மனித வாழ்வில் காணி நிலம் மிகவும் முக்கியமானது. அதற்கும் மேலாக அந்தக் காணி நிலத்தில் தென்னை, வாழை, மரக்கறிப் பயிர்கள் செய்து அதனை நாம் உணவாக ஆக்க வேண்டும்.

அது நம் உடல் ஆரோக்கியத்தை மட்டுமல்ல. என் தோட்டத்தில் விளைந்த பய ' என்ற உணர்வோடு அதனை உண்ணும்போது மிக உன்னதமான மன மகிழ்வு ஏற்படுகிறது.

இஃது உளச்சுகத்தைப் பாதுகா கின்ற அருமருந்து.

இதனால்தான் பாரதி, அன்னை பராசக்தியிடம் காணி நிலத்தை வரமாகக் கேட்டு நிற்கின்றான் என்றுணர முடியும்.

எனினும் பாரதி கூறியதுபோல, அந்தக் காணி நிலத்தில் நாம் பயிர் செய்கின்றோமா, தென்னை வைத்துப் பயன் பெறுகின்றோமா என்றால், இல்லை என்பதுதான் வேதனைக்குரிய பதிலாகிறது.

ஆகையால் காணி நிலம் எங்கும் பயிர் செய்வோம். எங்கள் காணி நிலத்தில் விளைந்த தானியங்களை, மரக்கறிகளை, பழவகைகளை எங்களின் உணவாக்குவோம்.

அதோ! வள்ளுவன் சொல்லுகிறான்

*இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்*
*நிலமென்னும் நல்லாள் நகும்*

என்று

ஆகையால் எதுவும் இல்லை என்றிராமல் எங்களிடம் இருக்கின்ற காணி நிலம் முழுமையிலும் விவசாயம் செய்து பொருளாதாரப் பஞ்சத்தில் இருந்து எங்களை நாங்களே காப்பாற்றிக் கொள்வோம்.

# ரஷ்ய - உக்ரைன் போரைவிட இலங்கையின் பொருளாதார யுத்தம் மிகவும் பாரதூரமானது

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையில் ஏற்பட்டுள்ள போரைவிட இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார யுத்தம் பாரதூரமான ஒன்று என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

உலக நாடுகள் பற்றியோ, வேறு நெருக்கடிகள் தொடர்பாகவோ பேசி விளக்கங்களை கூறுவது பலனளிக்காத செயல். பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களை அந்த நிலைமையில் இருந்து எப்படி மீட்பது என்ற விடயத்தையே நாம் சிந்திக்க வேண்டும்.

நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நிலைமையில், ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்துவதைவிடுத்து, அவர் சிறப்பாக செய்தார், இவர் சிறப்பாக செய்யவில்லை என்று கூறி வேடிக்கை பார்க்காது செயற்பட வேண்டும்.

நாட்டு மக்களை வாழவைப்பது தொடர்பாக பிரதான கட்சிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் வஜிர அபேவர்தன குறிப்பிட்டுள்ளார். (ஞா)

# வடமராட்சி பொற்பதி கிராமத்தில் வன்முறைக் கும்பல் அட்டகாசம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு குடத்தனை பொற்பதி கிராமத்தில் இரண்டு வீடுகள் வன்முறைக் கும்பலால் அடித்து நாசம் செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த சில நாட்களுக்கு முன்னர் மது போதைக் கும்பல் ஒன்று வீதியில் வெற்று கண்ணாடிப் போத்தல்களை உடைத்து துண்டங்களாக போடுவதை தட்டிக் கேட்டதன் விளைவாகவே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வீதியில் கண்ணாடிப் போத்தல்களை உடைக்க வேண்டாம் என்று சேதமாக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர்களால் தெரிவிக்கப்பட்ட நிலையில் அதனால் ஆத்திரமுற்ற நான்கு பேர் கொண்ட வன்முறை கும்பல் ஒன்றே வாள்களுடன் குறித்த வீடுகளுக்கு சென்று ஜன்னல் கண்ணாடிகள், சீற், குளிர்சாதனப் பெட்டி என்பன அடித்து நொருக்கப்பட்டதுடன், வேலியையும் சேதமாக்கியுள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (4-6-60)

# இரணைதீவு கடற்பகுதியில் 8 இந்திய மீனவர்கள் கைது

## விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைதீவு கடல் பகுதியில் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 8 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இரணைதீவு கடல் பகுதியில் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற ஒரு விசைப் படகையும் அதிலிருந்து 8 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து கிளிநொச்சி கிராஞ்சி கடற்படை முகாமில் வைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் கிளிநொச்சி மாவட்ட நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

நேற்று பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற பதில் நீதவான் சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர் படுத்தியதையடுத்து குறித்த 8 பேரையும் எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் நீரிழிவு நோய்க்கு உட்பட்டு இருப்பதனால் அதற்கான உரிய உணவு, மருந்துகளை வழங்குமாறும் மன்று கட்டளையிட்டுள்ளது. இதே நேரம் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 16 வயது, 18 வயது சிறுவர்களும் அடங்குவது குறிப்பிடத்தக்கது. (ஞா-33,100,315)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## துரியாதீத தவம்-பலன்கள்



1. பொறுமை, விட்டுக்கொடுத்தல், ஈகை ஆகிய மூன்று பண்புகள் குண்டலினி யோகிகட்கு தானாக அமையும்.(Tolerance, Adustment&Sacrifice)
2. இயற்கையின் மறைபொருள்களை உணர முடியும்.
3. மக்களுக்குள் இருக்கும் வேறுபாடுகள் ஆகிய உருவ அமைப்பு, குணம், அறிவின் உயர்வு, கீர்த்தி, உடல் வலிவு, சுகம், செல்வம் ஆகிய ஏழையும் நல்ல நிலைக்கு மாற்றி இணைய வைக்கிறது.
4. வினைப்பதிவுகளை மாற்றுகிறது.
5. மனதின் மறுமுனையான தன்னைத் தெய்வத்தோடு இணைக்கிறது.
6. தன்முனைப்பு, பழிச்செயல் பதிவுகள், வேண்டாப்பற்று என்று கூறப்படும் மும்மலங்களையும் நீக்கி விழிப்பு நிலைக்கு வரவழைக்கப்படுகிறது.
7. யோகிகள் பற்றறிவின்று விடுபட்டுக் கற்றறிவில் ஈடுபட்டு முடிவில் முற்றறிவில் லயம் ஆவர்.
8. பிரவிருத்தி மார்க்கத்தினின்று விடுபட்டு நிவர்த்தி மார்க்கத்திற்கு ஈர்க்கிறது.
9. புலனடக்கம் உண்டாகி அறிவு அமைதி அடையச் செய்கிறது.
10. பிரம நிலையான உண்மை அறிவதற்கு நுண்மை அறிவு ஏற்படச் செய்கிறது.
11. எல்லை கட்டிய தன்மையினின்று விடுபடச் செய்கிறது.
12. பகுத்தறிவானது முழுமையை நோக்கி பயணம் ஏற்க உதவுகிறது.
13. மனம் ஓடாது, தன்னை மறவாது மனதைப் பயிற்சிப்படுத்த வேண்டும். மனமே செயற்படும்.
14. எண்ணம், சொல், செயலால் எவருக்கும், எப்போதும் நன்மையே விளைவிக்க நாட்டமாயிருக்கச் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 07

**கலப்பு தேர்தல் முறைமை உள்ளூராட்சிஅதிகார சபை தேர்தலுக்கு பயன் உள்ளதா?**

எனது கருத்தின் படி பொதுவாக ஆம் என்றே கூறுவேன். அரசு எதற்காக கலப்புத் தேர்தல் முறையைக் கொண்டு வந்ததோ அந்த எண்ணம் ஓரளவு நிறைவேறியது. அவற்றை பின்வருமாறு கூறலாம்.

● வட்டாரத்திற்கு பொறுப்பு கூறுகின்ற உறுப்பினர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டார். இதனால் சாதாரண வாக்காளர்கள் தமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்குத் தேவையான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு நிரந்தர பிரதிநிதியொருவர் தெரிவு செய்யப்பட்டார்.

● இத்தேர்தல் முறையூடாக ஒரு குறித்த பிரதேசத்தில் செல்வாக்குள்ளவர் தெரிவுசெய்யப்பட சந்தர்ப்பம் கிடைத்தது. பணம்படைத்தவர்கள், அதாவது அதிக பணத்தை செலவளிக்கும் சந்தர்ப்பம் குறைவடைந்தது.

● சிறுபான்மைச் சமூகங்களுக்கு பெரிதாக பிரச்சினைகள் ஏற்படவில்லை. ஏனெனில் சிறுபான்மைச் சமூகங்களுக்கு ஏற்றவாறு சிறு சிறு வட்டாரங்கள் உருவாக்கப்பட்டதால் அவர்களும் தெரிவுசெய்யப்பட சந்தர்ப்பங்கள் கிடைத்தது.

● உருவாக்கப்படும் சிறு வட்டாரங்களால் ஒருவரின் வாக்குப்பலம் குறைந்துவிடும். அதாவது ஒரு சிறு வட்டாரத்தில் 500 வாக்காளர்கள் இருக்கும்போது ஓர் உறுப்பினர் 500க்கு குறைந்த வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்படுவார். ஆனால் இன்னொரு வட்டாரத்தில் தெரிவு செய்யப்பட 1000 வாக்குகளுக்கு மேல் பெறவேண்டி இருந்தது.

● இத் தேர்தலில் 385 உறுப்பினர்கள் தொங்கு ஆசன முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். சிறு சிறு வட்டாரங்கள் உருவாக்கப்பட்டால் பொதுவாக தொங்கு ஆசனங்கள் உருவாகும்.

● அதேபோன்று உறுப்பினர்களை நியமனம் செய்கின்ற போது வட்டாரத்திற்காக போட்டியிட்டு வெற்றீட்டிய அனைத்து வேட்பாளர்களும் கட்டாயமாக அந்த வட்டாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அச்சபைக்கு நியமனம் செய்யப்படுகின்றனர். அதற்கமைய வட்டாரத்திற்கு பொறுப்பு கூறுகின்ற உறுப்பினரொருவர் இம்முறைமையின் மூலம் கட்டாயமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.

● ஏதேனும் ஒரு கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு விகிதாசாரமாகக் கிடைக்க வேண்டிய உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கையை விட அவர்கள் வெற்றியீட்டியுள்ள வட்டாரங்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படின் வெற்றியீட்டிய வட்டாரத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு மேலதிகமாக உரித்துப் பெறும் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கைக்காக மேலதிக நபர்களின் பட்டியலிலிருந்து அல்லது வேட்பாளர்களின் பட்டியலிலிருந்து தேர்ந்தெடுக்கப்படாத வேட்பாளர்களிலிருந்து பெயர் குறிப்பதற்கு கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவருக்கு அதிகாரம் காணப்படுகின்றது.

● பெண்களின் அரசியல் பங்கேற்பு என்பது ஆணாதிக்க கருத்தியலை கொண்டவர்களினால் சாத்தியப்படாதிருந்த நிலையில் பெண்களுக்கான 25 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு கலப்பு தேர்தல்முறை களம் அமைத்துக் கொடுத்திருந்தது. இந்நிலையில் பெண்ணிலைவாதிகள் மற்றும் அமைப்புக்கள் என்பன இதனை பெரிதும் வரவேற்றன. அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு நீண்டநாள் மேற்கொண்ட முயற்சியின் பலன் இதுவாகுமென்றும் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டு வந்தன. ஆரம்பத்தில் கலப்பு தேர்தல் முறையை கட்சிகள் பலவும் வரவேற்றுப் பேசியிருந்தன.

● இந்நிலையில் கலப்புத் தேர்தல் முறையினை காட்டிலும் விகிதாசார தேர்தல் முறையே சிறந்ததாகுமென்று சிறுபான்மை கட்சிகள் சில கருதுகின்றன. விகிதாசார முறையே சிறுபான்மையினருக்கு சாதகமானது என்கிற கருத்தும் சிறுபான்மை கட்சிகளிடையே நிலவுவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

● கலப்பு தேர்தல் முறையின்கீழ் நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் முடிவுகளின் அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 239 உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றிக் கொண்டது. ஐக்கிய தேசிய கட்சி 42, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 38 என்று உள்ளூராட்சி மன்றங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மக்கள் விடுதலை முன்னணி இத்தேர்தலில் 431 உறுப்பினர்களை தனதாக்கிக் கொண்டிருக்கின்றது. 2011 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் தொகை கணிசமாக அதிகரித்துள்ளது. இத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பாரிய பின்னடைவை சந்தித்திருக்கின்றது. இந்நிலையில் ஒருசில கட்சிகள் தமது தேர்தல் பின்னடைவிற்கு கலப்பு தேர்தல் முறையை காரணம் காட்டி கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

கலப்பு தேர்தல் முறையின்கீழ் நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் முடிவுகள் பற்றி முன்னாள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவின் கருத்து

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் புதிய முறையானது பல்வேறு குழப்ப சூழ்நிலைகளுக்கும் வித்திட்டிருப்பதை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவும் சுட்டிக்காட்டி இருந்தார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண் பிரதிநிதித்துவ தெரிவுகளில் பாரிய நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. பெண்களுக்கென்று 25 சதவீத ஒதுக்கீடு கட்டாயமாக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றை நியமிப்பதில் சிக்கல்கள் தலைதூக்கியுள்ளன என்றும் கூறியிருந்தார்.

சில மன்றங்களில் ஒரு பெண் பிரதிநிதியை மாத்திரம் நியமிக்கும் நிலைமைகளும் காணப்படுகின்றன. இதேவேளை ஆசன ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்ற போதும் சில முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. ஆகவே இப்போது உள்ள தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வரவேண்டியிருக்கின்றது.

25 சதவீத பெண் பிரதி நிதித்துவம் கிடைக்காத நிலையிலும் மன்றங்களை நடத்திச் செல்ல முடியும் போன்ற திருத்தங்களை கொண்டு வரவேண்டும். அவ்வாறான நிலையில் முரண்பாடுகள் இல்லாது செயற்படுத்த முடியும் என்றும் கூறியிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் போன்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் பெரும்பான்மை விருப்பு என்ற நிலைப்பாட்டை எட்டமுடியாது என்றும் மகிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்திருந்தார்.

**நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண் பிரதிநிதித்துவ தெரிவுகளில் பாரிய நெருக் கடிகள் ஏற்பட்டிருந்தன. பெண்களுக்கென்று 25 சதவீத ஒதுக்கீடு கட்டாயமாக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றை நியமிப்பதில் சிக்கல்கள் தலைதூக்கியிருந்தன. இதனால் 25 சதவீத பெண் பிரதிநிதித்துவம் கிடைக்காத நிலையிலும் மன்றங்களை நடத்திச் செல்ல முடியும் போன்ற திருத்தங்களை கொண்டு வரவேண்டும்.**

இப்போது மாகாண சபைகளுக்கான தேர்தல் முறைகள் பற்றிப் பார்ப்போம்.

**மாகாணசபைகளுக்கான தேர்தல் சட்டம் -1988**

இலங்கையில் 1987 வரையில் இருந்த நிர்வாக முறையை மாற்றியமைப்பதற்காக இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாணசபைச் சட்டம் ஆகியவை இயற்றப்பட்டன.

சட்டமியற்றுதல் நிறைவேற்றுதல் மற்றும் நிதி அதிகாரங்களை உள்ளடக்கி அவற்றைமாகாண சபைகள் பயன்படுத்தக்கூடியவாறு ஆட்சியைப் பகிர்ந்தளிப்பதற்கான மாகாண அமைப்பு அரசியலமைப்பின் பதின்மூன்றாவ துதிருத்தத்தால் உருவாக்கப்பட்டது.

இத் திருத்தத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட பிரிவு 154 G (I) ஆனது மாகாண சபைகளில் ஒன்பதாவது அட்டவணையின் பட்டியல் I (மாகாண சபை பட்டியல்) இல் குறிப்பிடப் பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக மாகாண சபை சட்டவாக்க அதிகாரத்தை கொண்டுள்ளது.

154C பிரிவு ஒரு மாகாணத்திற்குள் ஆளுநரின் நிறைவேற்று அதிகாரத்தை பட்டியல் I இல் உள்ள விடயங்கள் வரை விரிவுபடுத்துகிறது. இவ் அதிகாரம் அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் 154 F(I) பிரிவின்படி பயன்படுத்தப்பட வேண்டும்.

பிரிவு 154 F(6) இன் படி, அமைச்சர்கள் குழு கூட்டாக மாகாண சபைக்கு பொறுப்பும் மற்றும் பதிலும் அளிக்க வேண்டும்.

இந்த இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தின் 13வது திருத்தம் இன்று பல திறனாய்வுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ்...

யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை காந்திபுரத்தைச் சேர்ந்த பொலிஸ் கொஸ்தாபலான கணேசரட்ணம் ஹரிகரன் (வயது- 24) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மன்னாரில் பணி புரியும் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் பணி நிமித்தம் யாழ்ப்பாணம் வந்துவிட்டு, மன்னார் நோக்கி திரும்பும் வேளை பூநகரி - சங்குப்பிட்டி பாலம் கடந்து சற்று தொலைவில், இராணுவ சோதனைச் சாவடிக்கு அருகில் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோர கட்டுடன் மோதி விபத்துக்குள்ளாகி மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஞா-18,33,104,315,316)



















## இன்றும்...

ஆணைக்குழு குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மின்சார உற்பத்திக்கு தேவையான எரிபொருள் பற்றாக்குறையால் இன்றைய தினம் மின்துண்டிப்பை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு இலங்கை மின்சார சபை விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ஞா)

## தமிழ் மக்களைச்...

- கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிடிக்குள் அகப்பட்டு பல்லாயிரக் கணக்கான தமிழ் உறவுகள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ஞா)

## இலங்கையை...

மைகள் உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட் மற்றும் உறுப்பு நாடுகளின் தலைமைப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடிதம் அனுப்பியுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அக்கட்சியின் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஞா)

## யாழ். பல்கலை...

துவ பீடத்தைச் சேர்ந்த இருவரும் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த ஒருவருமாக நான்கு சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

அவற்றின் படி, வணிக முகாமைத்துவ பீடத்தின் சந்தைப்படுத்தல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி திருமதி சிவாணி சண்முகதாஸ், கலாநிதி சி. சிவேசன் ஆகியோர் சந்தைப்படுத்தலில் பேராசிரியர்களாகவும் விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பி. அபிமன் இரசாயனவியலில் பேராசிரியராகவும் பொறியியல் பீடத்தின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் துறையின் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி த. திருவரன் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (ஞா-18,33,104)

## ஐ.நா தொட...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கை தொடர்பான விவாதம் எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அக்கூட்டத்தொடரை முன்னிறுத்தி இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் நிலைவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட்டினால் தயாரிக்கப்பட்ட 17 பக்க அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது. ஏற்கனவே இந்த அறிக்கை இலங்கையின் வெளிவிவகார அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த நிலையில், அதற்கான பதிலை அரசாங்கம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அனுப்பியிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் உயர்ஸ்தானிகரின் இலங்கை தொடர்பான அறிக்கையில் மனித உரிமைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான சட்ட மற்றும் கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள், இராணுவமயமாக்கல் மற்றும் காணிப் பிரச்சினை, அதிகரித்துவரும் பெரும்பான்மைத்துவம் மற்றும் நல்லிணக்கம், அமைதியைக் கட்டியெழுப்புவதில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள், சிவில் சமூகம் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மீதான அடக்குமுறைகளும் அச்சுறுத்தல்களும், தடுப்புக்காவலின்கீழ் இடம்பெறும் மரணங்கள், சித்திரவதைகள்மற்றும்ஏனைய முறையற்ற நடத்தைகள், பயங்கரவாதத்தடைச் சட்டப் பிரயோகம், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், முக்கிய வழக்குகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவு, ஐ.நாமனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அமுலாக்கம் உள்ளிட்ட விடயங்கள் பற்றிய உயர்ஸ்தானிகரின் நிலைப்பாடு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. (ஞா)

## ரஷ்...

சந்தித்துப் பேசிய பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

உக்ரைனிய அதிகாரிகள் பேச்சுவார்த்தைக்கு வரும் போது பெலாரஸ் பிராந்தியத்தில் நிறுத்தப்பட்டுள்ள அனைத்து விமானங்கள், உலங்கு வானூர்திகள் மற்றும் ஏவுகணை [illegible] [illegible]மாட்டாது என பெலாரஸ் ஜனாதிபதி லுகாஷென்கோ உறுதியளித்துள்ளார் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஞா)

## ஐரோப்பிய...

ரைன் தலைநகரை கைப்பற்றும் முனைப்புடன் தீவிரமாக முன்னேறிவரும் ரஷ்ய படைகளுக்கு பதில் தாக்குதலை உக்ரைன் படைகள் மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் ரஷ்யாவுக்கு எதிராக தாக்குதல் நடத்த பல ஐரோப்பிய நாடுகள் இராணுவ உதவி வழங்குவதாக பகிரங்கமாக அறிவித்துள்ளன. நேற்றையதினம் சில நாடுகளின் ஆயுதத் தளபாடங்கள் உக்ரைன் எல்லையை தாண்டியுள்ளன. இந்நிலையில் தமது இராணுவ நடவடிக்கைக்கு எந்தவொரு நாடும் இடையூறு செய்தால் அணுவாயுதத் தாக்குதல் நடத்தப்படும் என ரஷ்யா எச்சரித்துள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் மீது அணு ஆயுதங்களால் தாக்குதல் மேற்கொள்ளப்படும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஞா)


## 24 பேர்...

வரையில் இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 16 ஆயிரத்து 190 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக திருநெல்வேலியில் கையெழுத்து

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் திருநெல்வேலியில் இடம்பெற்றிருந்தது.

திருநெல்வேலி பொதுச் சந்தைக்கு முன்பாக நேற்று காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற கையெழுத்துப் போராட்டத்தில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் கலந்து கொண்டதுடன் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கையெழுத்துக்களை பதிவு செய்திருந்தனர்.(ஞா)




வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10391)

**076 825 7716** (ஆகாஸ்)

**Computer Operator ஆண் தேவை**

ஹாட்வெயர் விநியோகத் தளத்திற்கு நன்கு கணனி அனுபவமுள்ள வேலையாள் தேவை. (C-3858)

Expected : School Leavers.
Interview : 07.03.2022
Salary : Negotiable

SPN Motors,
No.149, Stanley Road,
Jaffna.

**077 358 3693, 076 686 1851**
**021 222 9733**

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536

**அருள்**
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.

தொ.பே:- **076 443 1576** (C-3859)

**Sales Representative Job**

Immediate vacancy for Distributor marketing representative for a well reputed company related to hardware business in the Northern Area. With attractive salary. (C-3857)

Please Forward CV : raviwarman@gmail.com
Contact Number : 077 358 3693

**கணித, ஆங்கில வகுப்புக்கள்**

- தரம் 10, O/L மாணவர்களுக்கானது.
- ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே.
- தனிப்பட்ட கவனிப்புக்கள்.
- மாணவர்களுக்குகேற்ற நேரத் தெரிவு.

(10362)

! இலங்கையில் எவரும் வழங்காத சலுகை !
எம்மிடம் முழுமையாக பயின்று O/L இல் கணிதம் & ஆங்கிலம் சித்தி பெறாவிடின் செலுத்திய முழுப் பணமும் மீள வழங்கப்படும்.
உங்களின் சித்தி எங்களின் வெற்றி
பதிவுகளை 28.02.2022 இற்கு முன்னர் மேற்கொள்ளுங்கள்.

WINSTAR LEARNING CENTER
N0.45, Vembadi street, Jaffna. 077 395 0857

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரிலுள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள / பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.
பில் கிளாக்கும் தேவை. (10405)

**077 748 8093**

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-3785)

0768226240 DHL

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 210 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- ஏ9 வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரம்
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 8 கி.மீ தூரம்
- lanka ashok leyland வாகன விற்பனை நிலையத்திற்கு அருகாமை
- 18 அடி பாதையுடன் இயற்கையான சூழல்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.




(10387)

**குரு - 077 623 4204, 077 288 0152**
**076 658 3621, 077 911 6983**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.